

கழகத் தலைவர், மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கில், கரூர் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் வி செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினார்.



நாகை மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நாகையில் மாவட்டக் கழக அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. உடன் மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம் தலைமை தாங்கினார். முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், தொகுதி பார்வையாளர்கள் இரா.சங்கர், ஜெயபிரகாஷ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராஜன், க. ராஜேந்திரன், இல.மேகநாதன், க. மறைமலை, மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், துணைச் செயலாளர்கள் ஆரூர். மணிவண்ணன், கற்பகம் நிலமேகம் மற்றும் பலர் உள்ளனர்.

### மாவட்ட அவைத் தலைவர் ப.செல்வம் தலைமை!

# திருச்சி கிழக்கில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் போட்டியிட வேண்டும்!

## நாகை மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

நாகை, மே 19 –

நாகை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்ட கழக அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கழக அவைத்தலைவர் ப.செல்வம் தலைமை தாங்கினார். முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், தொகுதி பார்வையாளர்கள் இரா.சங்கர், ஜெயபிரகாஷ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராஜன், க. ராஜேந்திரன், இல.மேகநாதன், க. மறைமலை, மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், ஆகியோர் முன்னிலை வைத்தனர். மாவட்ட துணைச் செயலாளர் ஆரூர். மணிவண்ணன் வரவேற்றார்.

கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்தும், நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் பேசினார்.

கூட்டத்தில் மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி. மனோகரன், தலைமைக் கழக வழக்கறிஞர் மு.தினேஷ்குமார், மாநில சிறுபான்மை அணி துணை செயலாளர் சாகுல் ஹமீது, ஒன்றிய கழக செயலாளர் ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், மகா.குமார், ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், கே. பழனியப்பன், சோ.பா. மலர்வண்ணன், என்.சதாசிவம், சிக்கல் என்.ஆனந்த், உதயம் வே.முருகையன், நகர கழக செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பி.டி. சார்லஸ், இல.பழனியப்பன், கோ.சிவகுமார், எஸ்.பன்னீர் செல்வம், உமா செந்தாமரைச்செல்வன், பேரூர் கழக செயலாளர்கள் கா.அட்சலிங்கம், சி.சுப்பிர மணியன், முகமதுசுல்தான், மாவட்ட சார்பு அணிகளின அமைப்பாளர்கள் இரா. முருகையன், பி.என். கார்த்தி, ப.உதயகுமார், அ.பாரிபாலன், ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, ஆர்.துரைராஜ், பெ.முருகானந்தம், எஸ். பால்ராஜ், கே. எஸ். சாகுல் ஹமீது ராஜா, க.சத்தியமூர்த்தி, த. தமயந்தி, வ.காமல், ஆர், ஆர். குலோத்துங்கள், புவனேஸ்வரி செந்தில், வெற்றிவேல், இளம்.சுந்தர், பாலமுரளி, ஆர்.சுரேந்தர், எஸ். சந்தோஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டேனியல்சத்யா, எஸ்.சுரேஷ், தாமோதரன், ஆகியோர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட கழக துணை செயலாளர் கற்பகம்நீலமேகம் நன்றி கூறினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

கடந்த 14.5.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் நடந்து முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் அறுதி பெரும்பான்மை இல்லாமல் கழகம் வெற்றி வாய்ப்பை இழந்துள்ளது. இந்த தோல்விக்கு நானே பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் அறிவித்துள்ளார்கள். தலைவர் தளபதி அவர்களின் இந்த கருத்து அவரது தலைமை பண்பை பறைசாற்றுகிறது. தலைவர் தளபதி அவர்களின் முகத்தில் தோல்வியும் எந்த சாயலும் இல்லை. இன்னும் பல்லாண்டுகள் உழைப்பதற்கான ஊட்டமும் ஊக்கமும் இருப்பதாகவும் தோன்றுகிறது. தலைவர் தளபதியார் தோற்றுப் போனார் என்ற செய்தியை எதிரிகள் கூட ரசிக்கவில்லை இரவு என்பது இன்னொரு பகலைத் தருகிறது. தோல்வி என்பது இன்னொரு வெற்றியைத் தரும் என்பதில் எந்த ஒரு மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது.

திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் ஒரு பெரிய ஆலமரத்தை நிறுவிய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்கும் நம் கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கும் வரலாறு ஊர் ஒற்றுமையை வளர்த்து இருக்கிறது 1962 சட்டமன்ற தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் 50 சட்டமன்ற உறுப்பினர்களை வென்றிருக்கிறது ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் வெற்றி வாய்ப்பு இழந்தார்கள் தான் மட்டும் சட்டமன்றம் செல்லாமல் தம்பிமார்களை சட்டமன்றத்தில் அனுப்பி வைத்தார்கள் 2026 ஆண்டிலும் வரலாறு வட்டமடிக்கிறது கழக தலைவர் தளபதி அவர்கள் வெளியே நிற்கிறார் தளகர்த்தர்கள் சட்டமன்றம் செல்கிறார்கள் அண்ணா மீண்டும் வந்தார் தலைவர் தளபதி அவர்களே தாங்கள் மீண்டும் வருவீர்கள் தோல்வி பொறுப்பேற்பதாக அறிவித்தீர்களே இல்லை தலைவா உங்களின் உண்மை தொண்டர்களாக நாங்கள்தான் பொறுப்பு ஏற்க வேண்டும் பொறுப்பேற்று கொள்கிறோம் தேர்தல் வெற்றி வாய்ப்பை இழந்தோமே தவிர தாங்கள் தலைமையை என்றும் இழந்ததில்லை, இழக்கவும் மாட்டோம் எனவே கழகத் தோழர்களே தியாக மறவர்களே கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் தலைமையில் அணிவகுப்போம் மீண்டும் தமிழ்நாட்டை வென்றெடுப்போம் சமதர்மம் தழைக்க சமத்துவ சமுதாயம் படைக்க நாம் அனைவரும் அணிதிரள்வோம் என நாகை மாவட்டம் உளமாற உறுதி கூறுகிறது என்றும்,

நடந்து முடிந்த 2026 சட்டமன்ற தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் 59 இடங்களில் வெற்றி பெற்று பிரதான எதிர்க்கட்சியாக சட்டமன்றத்தில் பணியாற்றி வருகிறது சட்டமன்றத்தில் பிரதான் எதிர்க்கட்சி தலைவராக இளம் தலைவர்களின் எழுச்சி நாயகன் கழக இளைஞர் அணி செயலாளர் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை அறிவித்த கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கு நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது என்றும், நடந்து முடிந்த 2026 சட்டமன்ற தேர்தலில் நாகை மாவட்டத்தில் உள்ள நாகை,கீழ்வேளூர், வேதாரண்யம் ஆகிய மூன்று தொகுதிகளிலும் திராவிட முன்னேற்ற கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்கள் வெற்றிபெற இரவு, பகல் பாராமல் உழைத்திட்ட திராவிடம் முன்னேற்றக் கழக மாவட்ட கழக செயலாளர் என். கௌதமன் அவர்களுக்கும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகளுக்கும், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர் மற்றும் நிர்வாகிகளுக்கும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கும் கழக சார்ப அணி மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகளுக்கும் தொண்டர்களுக்கும் தோழர்களுக்கும் நாகை மாவட்ட செயற்குழு நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதோடு வெற்றி வாகை சூடிய நாகை சட்டமன்ற உறுப்பினர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா, கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் லதா ஆகியோருக்கு நாகை மாவட்ட செயற்குழு வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வது என்றும்,

நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி வாய்ப்பு இழந்ததற்கான காரணத்தை ஆய்வு செய்ய கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் நியமித்துள்ள ஆய்வு குழுவிற்கு நாகை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர், கழக நிர்வாகிகள் அனைவரும் முழு ஒத்துழைப்பு கொடுப்பது எனவும் எதிர்வரும் ஜூன் 3ஆம் தேதி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை மாவட்ட முழுவதும் இரு வண்ணக் கொடியேற்றி இனிப்புகள் வழங்கியும் ஏழை எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடுவது என்று ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களை நாகை மாவட்ட செயற்குழுக் கூட்டம் வேண்டி கேட்டுக்கொள்கிறது இவ்வாறு கூ ட்டத்தில்தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

# திரைப்படத் தயாரிப்பாளர் - நடிகர் கே.ராஜன் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, மே.19-**

**திரைப்படத் தயாரிப்பாளரும் நடிகருமான கே.ராஜன் அவர்கள் நேற்று முன்தினம் மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

**அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தி வருமாறு :-**

திரைப்படத் தயாரிப்பாளரும் நடிகருமான திரு.கே.ராஜன் அவர்கள் தற்கொலை செய்துகொண்டு உயிரிழந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். அவரது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரைத்துறையின் முன்னேற்றத்திற்காகவும் சிறு தயாரிப்பாளர்களின் நலனுக்காகவும் எப்போதும் துணிச்சலுடன் குரல் கொடுத்து வந்தவர் ராஜன் அவர்கள்.

திரைப்பணியோடு கல்விப் பணியும் ஆற்றியவர். தமிழ்த் திரைப்படங்களுக்குத் தமிழிலேயே தலைப்பு வைக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்தவர்.

தனிப்பட்ட முறையில் என்மீது மிகவும் அன்பு செலுத்திய ராஜன் அவர்கள், தனது பேச்சில் எப்போதும் திரைத்துறையின் அடித்தளத்தில் பணியாற்றும் தொழிலாளர்களின் நலனை முன்னிறுத்தியே பேசுவார்.

அன்னாரை இழந்து வாடும் கலைத்துறையினருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் இந்தத் துயரத்தைத் தாங்கும் வலிமை கிடைக்கட்டும். அவர்களுக்கு எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அந்த இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### விழுப்புரத்தில் மூடுவதாகக் கூறப்பட்ட

# டாஸ்மாக் கடைக்கு பெட்டி, பெட்டியாக வந்த மதுபாட்டில்கள்!

## பொதுமக்கள் அதிர்ச்சி!

*விழுப்புரம், மே 19 -*

விழுப்புரத்தில் தமிழ்நாடு அரசு மூடுவதாக அரசாணை வெளியிட்ட டாஸ்மாக் கடைக்கு லாரியில் மது பாட்டில்கள் பெட்டி, பெட்டியாக நேற்று கொண்டு வந்து இறக்கி வைக்கப்பட்டதால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் புதிதாக பொறுப்பேற்ற தவெக அரசு கடந்த சில நாட்களுக்கு முன் தமிழ்நாடு முழுவதும் வழிபாட்டுத் தலங்கள், கல்வி நிறுவனங்கள், பேருந்து நிறுத்தங்கள் உள்ளிட்ட பகுதிகளில் இயங்கும் டாஸ்மாக் கடைகள் கணக்கெடுக்கப்பட்டு 717 டாஸ்மாக் கடைகள் மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டது.

அதன்படி விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 11 கடைகள் மூடுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்த பட்டியலில் வழிபாட்டுத் தலங்கள், பேருந்து நிறுத்தம் உள்ளிட்ட மக்கள் புகார் கூறிய இடங்களில் உள்ள டாஸ்மாக் கடைகள் மூடவில்லை என்ற அதிருப்தியும் எழுந்தது.

இதுபோல், விழுப்புரம் நகரில் ரயில் நிலைய பேருந்து நிறுத்தம் அருகே உள்ள டாஸ்மாக் கடையால் தொடர்ந்து போக்குவரத்து நெரிசலும், அப்பகுதியில் உள்ள கல்வி நிறுவனங்கள், குடியிருப்பு வாசிகள் பாதிக்கப்பட்டு வந்தனர். தற்போது இந்த கடை மூடப்படுவதாக அரசாணை வெளியிட்டதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்த அறிவிப்பு வந்த மறுநாளே கடைகளில் மது வாங்குவதற்காக குடிமகன்களும் படையெடுத்தனர். கடையில் உள்ள சரக்கு தீரும் வரை கடை செயல்படும், அதன் பிறகு தான் மூடப்படும் என்று ஊழியர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் கடையில் உள்ள சரக்கு அனைத்தும் காலியான நிலையில் நேற்று லாரியில் பெட்டி, பெட்டியாக பீர், பிராந்தி உள்ளிட்ட மது பாட்டில்கள் கொண்டு வந்து இறக்கி வைக்கப்பட்டுள்ளது. இதனைப் பார்த்த பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். கடையில் சரக்கு தீர்ந்ததும் சீல் வைப்பார்கள் என்று கூறிய நிலையில் மீண்டும் லாரியில் பெட்டி பெட்டியாக மதுபாட்டில் வந்து இறங்குவது உண்மையிலேயே தமிழ்நாடு அரசு கூறியபடி இந்த டாஸ்மாக் கடை மூடப்படுமா? அல்லது கண்துடைப்பா? என கேள்வி எழுப்பி உள்ளனர்.

### பெரம்பலூர் மாவட்டம்

# குன்னம் தொகுதி மக்களுக்கு நான் என்றும் நன்றியுடன் இருப்பேன்!

## 3-வது முறையாக வெற்றி பெற செய்ததால் சா.சி.சிவசங்கர்.எம்.எல்.ஏ. நெகிழ்ச்சி!



*பெரம்பலூர், மே 19 -*

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதியில் வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்ற போக்குவரத்து மற்றும் மின்சா ரத்துறை முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலத்தூர் கிழக்கு ஒன்றியத்தில் உள்ள கொளக்காநத்தம், அயினாபுரம், அணைப்பாடி, கொளத்தூர், கூடலூர், இலுப்பைக்குடி, பிலிமிசை, கூத்தூர், ஜெமீன்பேரையூர், புஜங்கராயநல்லூர், நொச்சிக்குளம், பாலம்பாடி, ஜெமீன் ஆத்தூர், ராமலிங்கபுரம், ரசுலாபுரம், மேத்தால், காரைப்பாடி, சில்லக்குடி, திம்மூர், அருணகிரிமங்கலம், மாக்காய்குளம் ஆகிய பகுதிகளில் சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். இது தேர்தல் பிரச்சாரத்திற்கு நிகராக நன்றி அறிவிப்பு நிகழ்ச்சியும் நடந்து வருகிறது.

அவருக்கு தி.மு.க. உள்ளிட்ட கூட்டணி கட்சி தொண்டர்கள் பொன்னாடை போர்த்தியும், பட்டாசுகள் வெடித்தும் வரவேற்றனர். பெண்கள் ஆரத்தி எடுத்தும், வெற்றி திலகமிட்டும் சிவசங்கரை வாழ்த்தினர். இதில் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெக தீசன், ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளரும், முன்னாள் ஒன்றிய குழு தலைவருமான என்.கிருஷ்ணமூர்த்தி, கொளக்காநத்தம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் என். ராகவன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வ. சுப்ரமணியன், மாவட்ட கலை இலக்கிய பேரவை அமைப்பாளர் கே.எம்.ஏ. சுந்தரராசு, பாலமுருகன், மாவட்ட பிரதிநிதிகள் ராஜேந்திரன், இளவரசு, ஒன்றிய நிர்வாகிகள் ராமசாமி, சக்திவேல், பிரபு, கிளை செயலாளர் துரை, விடுதலை சிறுத்தை கள் கட்சி மாவட்டச் செயலாளர் அன்பானந்தன்,தே.மு.தி.க. மாவட்ட செயலாளர் துரை.சிவா ஐயப்பன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதையடுத்து நொச்சிக்குளம் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்த சா.சி.சிவசங்கர் பேசியதாவது:

குன்னம் தொகுதி மக்களுக்கு எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன். சட்டப்பேரவைத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலினின் ஆதரவு வேட்பாளராக, கூட்டணி கட்சியான தேசிய முற்போக்கு திராவிடர் கழகம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஒத்துழைப்புடன் சட்டபேரவை தேர்தலை சந்தித்தேன். தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி வாக்காளர்கள் என்னை வெற்றி பெற செய்ததற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தி.மு.க. ஆட்சியில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

குன்னம் தொகுதியில் உள்ள கொளக்காநத்தத்தில் அரசு கலைக்கல்லூரி தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்டது. மின்சாரப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஒரு துணை மின்நிலையம் அமைக்கும் பணிகள் நடந்து வருகிறது. குன்னத் தில் இருந்து முக்கிய ஊர்களுக்கு மக்கள் செல்ல புதிய சாலை, புதிய பேருந்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. என்னுடைய சேவையை பாராட்டி தொகுதி மக்கள், வாக்களித்து எம்.எல்.ஏ.வாக தேர்வு செய்துள்ளீர்கள். அதற்கு நான் குன்னம் தொகுதி மக்களுக்கு நன்றி கடன் பட்டுள்ளேன். எதிர்க்கட்சியாக இருந்தாலும் சட்டமன்றத்திலே கழகத்தின் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் சிறப்பாக செயல்படுவோம்.

ஆளும் கட்சியாக இருந்தது போல எதிர்க்கட்சியாகவும் இருந்து செயல்படுவோம். குன்னம் தொகுதி மக்களின் வளர்ச்சிக்காக சட்டமன்றத்தில்தொடர்ந்து எனது குரல் ஒலித்து கொண்டிருக்கும். இத்தொகுதியில் மக்கள் 3ஆவது முறையாக வெற்றி பெற செய்திருப்பது பெருமையாக உள்ளது. உங்கள் வீட்டு பிள்ளையாக இருந்து தொடர்ந்து பணியாற்றுவதுடன், நன்றியுடன் இருப்பேன் என்று கூறி, வரவேற்பு மற்றும் திகலமிட்ட மக்களுக்கு தனது நன்றியை கூறி விடைபெற்றார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி. மோகனன்

### மே 19 (2021)



**இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கியவர்.**

**புழல் ஒன்றியம், செட்டிமேடு கிளைச் செயலாளராகவும், மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**